
# தலைவலி தலையில் இல்லை!


**- டாக்டர். சித்தீக் ஜமால்,** B.Sc., MBBS., MD., (Acu)
**- டாக்டர். பஸ்லூர் ரஹ்மான்,** MBBS., Ph.D., (Acu)

நாம் திரையரங்கில் படம் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். திடீரென கரண்ட் கட்டாகி விடுகிறது. மின்சார விசிறிகள் நின்று புழுக்கம் ஏற்பட ஆரம்பிக்கிறது. திரையரங்கினுள் படம் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு சிலருக்கு மட்டும் தலைவலி ஏற்பட ஆரம்பிக்கிறது. திரையரங்கை விட்டு வெளியேறி, சுத்தமான வெளிக்காற்றை சுவாசிக்க ஆரம்பித்ததும் தலைவலி மறைந்து போகிறது.

திரையரங்கினுள் ஒரு சிலருக்கு மட்டும் ஏற்பட்ட இந்த தலை வலிக்குக் காரணம் அவர்களின் நுரையீரலின் இயக்கத்திறன் குறைவு தான். எவ்வளவு தான் காற்றுப்புழுக்கம் இருந்தாலும் இருக்கும் பிராண வாயுவை முழுமையாகக் கிரகிக்கக் கூடிய சக்தி நுரையீரலுக்கு இருக்க வேண்டும். இந்த இயக்கத்திறன் நுரையீரலில் குறையும் போதுதான் தலைவலி ஏற்படுகிறது.

**நுரையீரலின் இந்த இயக்கத்திறன் குறைவு நிவர்த்திக்கப் படாத வரையில் இவ்வகைத் தலை வலியைக் குணப் படுத்த முடியாது.**

**கல்லீரல்**

மது அருந்தும் பழக்கமுள்ளவர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். மது அருந்தி விட்டு தூங்கி எழும்போது தலைவலியுடனே எழுந்திருப்பார்கள். மதுவில் உள்ள ஆல்கஹால் கல்லீரலைப் பாதிக்கிறது. கல்லீரல் சோர்வடையும் போது உடலில் உள்ள தசைநார்கள் தளர ஆரம்பிக்கின்றன. மஞ்சள் காமாலை கல்லீரல் பாதிப்பால் ஏற்படுகிறது. இந்த நோய் ஏற்படும் போது உடல் முழுவதும் அசதியுடன் கை, கால்களும் அவற்றின் தசைகள் வேலை செய்யும் சக்தியின்றி துவண்டு விடுகின்றன.

கல்லீரல் பாதிக்கப்படும் போது உடலில் உள்ள தசை நார்கள் துவள ஆரம்பிக்கின்றன. அது மட்டுமல்ல ; இரத்தக் குழாய்களின் தசைநார்களும் உறுதியிழந்த இரத்தக் குழாய்களின் வழியாக இரத்தம் பாயும்போது அவை மேலும் விரிவடைகின்றன. இரத்தக் குழாய்கள் பெருமளவு விரிந்து சுருங்குவதால் ஏற்படும் தலைவலி (Vascular or Tension Headache) யானது கல்லீரலில் ஏற்பட்டுள்ள பாதிப்பு நீக்கப்படும் வரை நீங்காது.

உறுதியிழந்த தசை நார்கள் ஏதும் வேலை செய்ய வேண்டுமானால் நல்ல நிலையிலிருக்கும் தசை நார்களுக்குத் தேவைப்படும் இரத்த ஓட்டத்தைக்காட்டிலும் அதிகமான இரத்த ஓட்டம் தேவைப் படுகிறது. இதனால் இதனால் இருதயமும் அதன் தசை நார்களும் சீக்கிரமே சோர்வடைய ஆரம்பிக்கின்றன. இருதயம் பெருத்து வீக்க மடைய (Cardiomegaly) ஆரம்பிக்கிறது.


கல்லீரல் பாதிக்கப்பட்ட நிலையில் எந்த உறுப்புக்கு வேலைக் கொடுக்கிறோமோ! அந்த உறுப்பினுள் இரத்தம் அதிகமாகச் செல்கிறது. பலம் குறைந்துள்ள இரத்தக் குழாய் களின் தசை நார்களும் வெகுவாக விரிவடைகின்றன இதன் காரண மாகவும் (Vascular or Tension Headache) ஒரு சிலருக்குக் கொஞ்சம் அலட்டிக் கொண்டாலும் அல்லது கொஞ்சம் கூர்ந்து படிக்கும் போது கண்களின் தசைநார்களுக்கு வேலைக் கொடுத்து விட்டால் தலைவலி ஏற்பட்டு விடுகிறது.

வெளியுறுப்புகளில் கண்களில் அதிகமான நுண்ணிய இரத்தக் குழாய்கள் அவற்றின் நுட்பமான செயலுக்கு தக்கவாறு சிறப்பான முறையில் அமையப் பெற்றுள்ளதால், கல்லீரலின் பலவீனம் கண்களை பலமாக தாக்குகிறது. படித்தாலோ, ஏதும் வெளிச்சத்தை பார்த்தாலோ

தலைவலி ஆரம்பமாகி விடுகிறது. நெடுநேரம் கண்களை பொத்திக் கொண்டோ அல்லது இருட்டறையில் முடங்கிக் கிடந்தாலோ அன்றி தலைவலி தீராது. தசைகள் சம்மந்தப்பட்ட எந்த உறுப்பில் ஏற்படும் எந்த வியாதியாகட்டும் (Cardiomegaly, Myopathy, Myasthaenia, Motor Neurone) அதற்கு கல்லீரலே காரணமாகும்.

கல்லீரல் பாதிப்பு சம்மந்தப்பட்ட மற்ற அறிகுறிகள் பசியின்மை, வாந்தி, மயக்கம், போன்றவையாகும், கல்லீரல் காரணமாகத் தலைவலியால் அவதிப்படும் அனைவரும் தலைவலி கடுமையாகும் போது வாந்தியுணர்வும், லேசான மயக்கமும் ஏற்படுவதை உணருவார்கள். **வாந்தியால் பித்தம் கொஞ்சம் வெளியானதும் தலைவலி கணிசமாக குறைந்து விடும்.**

தலைவலி, மயக்கம் என்பது, இரத்தக் கொதிப்பு (B.P) என்று நாம் எண்ணுகிறோம். இந்த (B.P) க்கு காரணம் இருதயத் தசைநார்கள் சோர்வடைந்து இயங்குவதால் இருதயம் முழுமையாக இயங்கச் சக்தியற்ற நிலையில் ஒவ்வொரு முறை துடிப்பின் போதும். அதன் பலவீனத்திற்குத் தக்கவாறு இருதயத்திலிருந்து இரத்தம் வெளியேறுவது குறைகிறது. கணிசமான அளவு இரத்தம் இருதயத்திலேயே தேங்குகிறது.



பெருங்குடல் சக்தி நாளம் – படம்-1

(High Diastolic and Reducing Pulse Pressure) இருதயத்தில் ஒருமுறை துடிப்பின் முடிவில் எந்த அளவிற்கு இரத்தம் தேங்குகிறதோ,

அதே அளவுக்கு இரத்த குழாய்களிலும் ஒவ்வொரு முறை விரிந்து சுருங்கும் போதும் ஒரு குறிப்பிட்ட அளவே இரத்த ஓட்டம் நடை பெறுகிறது. பெரும்பாலும் இரத்த ஓட்டம் நடைபெறாமல் இரத்தக் குழாய்களிலேயே தேங்குகிறது. இந்த நிலையில் இரத்த அழுத்தம் அதிகமாகும். ஆனால் இதற்குக் காரணம் இருதயமோ, இரத்தக் குழாய்களோ அல்ல. இருதயத் திற்காக மருந்து மாத்திரை களை சாப்பிடுவதால் தலைவலியும் குறையாது; மயக்கமும், வாந்தியும் கூட தீராது. இரத்த அழுத்தமும் குணமாகாது. மாறாக இம்மருந்து கள் கல்லீரலின் ஏற்கனவே ஏற்பட்டுள்ள பாதிப்பை மென் மேலும் மோசமாக்குகிறது. இதன் விளைவு அவ்வளவு தொந்தரவு களும் பன்மடங்கு அதிகரிக்கிறது.

**பெருங்குடல், நுரையீரல்**

அடுத்ததாக, பெருங்குடலில் அதன் இயக்கத்திறன் குறைவால் மலச்சிக்கல் ஏற்படும்போதும், தலைவலியை ஏற்படுத்துவதை பெரும்பாலோர் அனுபவித்திருப்பார்கள். பெருங்குடல் தன் இயக்கத்தில் குறைவுபடும் போது மூச்சி திணறலும், அலர்ஜி போன்ற சைனஸ் தொந்தரவையும் ஏற்படுத்துகிறது. பெருங்குடலும், நுரையீரலும் ஒன்றுக்கொன்று அவற்றின் இயக்கத்தில் மிக மிக நெருக்கமான தொடர்புடன் செயல்படுகிறது. ஒரு உறுப்பின் இயக்க குறைவு மற்ற உறுப்பில் பிரதிபலிக்கிறது. ஆக, பெருங்குடல் பலவீனம், நுரையீரல் பலவீனத்தையும் நிச்சயமாக ஏற்படுத்தும். நுரையீரல் பலவீனம், அதன் தொடர்புடைய மூக்கிலும் , சைனஸ்களிலும் பலவீனத்தை ஏற்படுத்துகிறது. இவ்வாறு பெருங்குடலில் ஏற்படும் இயக்க குறைவானது சைனஸ் தலைவலியை ஏற்படுத்த கூடியதாக உள்ளது.

**பெருங்குடலின் இயக்கத்தைச் சீராக்காத வரையில் சைனஸ் தலைவலியை குணமாக்க சாத்தியமில்லை.**


படம் -1

**வயிறு**

வயிற்றில் போதுமான சக்தி இல்லையெனில், தலைவலியை ஏற்படுத்தும். வயிற்றில் சக்தி குறையும் அப்போது தான் பசியற்றுப் போகிறது.

பொதுவாக நமக்குப் பசி எடுக்கும் போது, சாப்பிடும் வேளை தள்ளிப் போகிறது என்று வைத்துக் கொள்வோம். கொஞ்ச நேரத்தில் பசியற்று விடுகிறது இல்லையா?

ஒவ்வொரு முறையும் இந்தநிலை (அதாவது, பசிக்கும் போது சாப்பிடாமல் தள்ளிப்போகும் இந்த நிலை) யில் தான் வயிற்றில் ஜீரண சக்தி குறைய ஆரம்பிக்கிறது. சிலருக்கு நன்றாக பசித்திருக்கும் போது தலையை வலிக்கும் சாப்பிட்டவுடன் தலைவலி அடங்கி விடும் , இன்னும் சிலருக்கு நன்றாக பசிக்கும் போது சாப்பிடத் தவறி விட்டால், அதன் காரணமாகத் தலைவலி ஆரம்பித்துவிட்டால்,



சிறுகுடல் சக்தி நாளம் – படம்-2

பிறகு எவ்வளவு சாப்பிட்டாலும், அடங்காது. இவ்வாறு வயிற்றின் இயக்க குறைபாட்டின் காரணமாக ஏற்பாடு தலைவலியை வயிற்றுக்குத் தேவையான சக்தியை புதுபிக்காத வரையில் குணப்படுத்த முடியாது.

படம்– 5.

**மண்ணீரல்**

மண்ணீரல் சோர்வின் காரணமாக ஏற்படும் தலைவலி சளி கோர்த்துக் கொண்டு மூக்கடைப்புடன் கூடிய தலை வலியாக இருக்கும்.

**சிறுகுடல்**

சிறுகுடலின் இயக்கம் குறையும் போது வயிற்றில் (Gas) சம்மந்தமான தொந்தரவுகளுடன் இரண்டு பக்க கன்னங்களிலும் உள்ள மேடான எலும்புப் பகுதிகளில் வலியை ஏற்படுத்தும்.


**சிறுநீர்ப்பை**

சிறுநீர்ப்பை இயக்கம் பாதிக்கப்படும்போது இரண்டு புருவங்களின் உட்புறங்களில் இருந்து வலி தொடங்கி பின்னர் நேர்கோடாகத் தலையின் மேல் பாகத்திற்குப் பரவும்.

தலைவலியுடன், கழுத்துப் பிடரி வலியும் பெரும்பாலும் சேர்ந்து இருக்கும். இந்த மாதிரியான வலிக்குத்தான் பெரும்பாலும் ஆங்கில மருத்துவத்தில் கழுத்துப்பகுதியில் முது கெலும்பு தேய்ந்து விட்டது (Cervical Spondylosis) என்று கூறி அனுப்பிவிடுவார்கள்.

**சிறுநீர்ப்பையின் இயக்கக் குறைவை சீர்படுத்தும் போது முதுகுதண்டு சம்மந்த** மான அனைத்து நோய்களும் (Cervical Spondylosis, Lumbar Spondylosis, Slipped Disc, Sciatica) மறைந்துப் போகும் புருங்களின் உட்புறத்திலி ருந்து நேர் கோடாக மேல் நோக்கிப் பரவும் தலை வலியும் குணமாகும்.





படம் – 3 (B)

சிறுநீரக பலவீனத்தின் காரணமாக ஏற்படும் தலைவலி வெறும் கணமாகவும், பாரமாகவும் தான் இருக்கும் தலையில் ஏதோ "வெயிட்"டை வைத்தது போல இருக்கும். சற்று அதிர்ச்சியான சூழ்நிலை இந்த தலைபாரத்தைத் தோற்றுவித்துவிடும். மேலும் சிறுநீரக பலவீனம் உடையவர்கள் சாதாரண விஷயத்திற்கும் சற்று பலமான சப்தங்களுக்கும் அதிர்ச்சி அல்லது உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள். பெரும்பாலும் முன்நெற்றியில் தலைபாரம் அதிகமாகத் தோன்றும். இரவில் தூக்கமின்மை ஏற்படும்.

**பித்தநீர்ப்பை**



பித்தநீர்ப்பையின் இயக்கத்தில் கோளாறு ஏற்படும் போது கண்களின் இருபுறமும் நெற்றிப்பொட்டில் வலியைத் தோற்றுவிக்கிறது. மேலும் கழுத்தின் இரு புறங்களிலும், பின்னர் தலையிலும் தலைவலியைத் தோற்றுவிக்கக்கூடிய தாகவும் உள்ளது **காபி,டீ, அருந்தினால் தலைவலி சுமாரகும் என்பவர்களுக்கு பித்தநீர்ப்பை பாதிப்படைந்து உள்ளது என்பது நிச்சயம்.**

**இருதயம் பெரிக்கார்டியம்**

இருதயத்திற்கு போதுமான பாதுகாப்பைக் கொடுப்பது பெரிகார்டியம் என்னும் இருதயத்தைச் சுற்றியுள்ள மேலுறையாகும். இருதயத்தின் இயக்கத்தைச் சீரான நிலையில் வைத்திருக்க உதவுவது இந்த பெரிகார்டியம் என்னும் மேலுறை தான். எனவே பெரிகார்டியம் எப்போது வலுவிழக்க ஆரம்பிக் கிறதோ அப்போது இருதயமும் பலமிழக்கிறது.

உதாரணமாக ஒருவருக்கு நெஞ்சு வலி ஏற்படுகிற தென்றால் அது வாய்வுத்தொந்தரவா Gastritis அல்லது இருதயத் தொந்தரவா என்று தெரிந்துக் கொள்வதற்காக ECG எடுத்துப் பார்க்கும் போது நிச்சயமாக அதில் மாறுதல் தெரியும் இருந்தாலும் அதை வைத்து எதனையும் தெரிந்துக் கொள்ள முடியாது காரணம் ECG குறிப்பான மாறுதல்கள் எதனையும் காட்டாது.

இதை வைத்து இருதயத் தொந்தரவுகள் ஏதும் இல்லை வாய்வுத்தொந்தரவால் (Gastritis) ஏற்படும் வெறும் மாற்றங்கள் தாம் என்ற முடிவுக்கு வருவார்கள். வாய்வுத் தொந்தரவால் ECG யில் மாற்றங்கள் ஏற்படக் காரணம் என்ன?

மார்புப் பகுதியில் கெட்ட சக்தியானது நெஞ்சுக் கரிப்பை ஏற்படுத்தும் போது, மார்பு பகுதியில் உள்ள மற்ற உறுப்புகளான இருதயத்தையும், நுரையீரலையும் இந்த கெட்ட சக்தியின் கதிர் வீச்சு தாக்குகிறது.

நுரையீரலைத் தாக்கும் போது மூச்சுக்கஷ்டம் ஏற்படுகிறது. இருதயத்தைத் தாக்கும் போது, இருதயத்தை தாக்க விடாமல் பெரிகார்டியம் அந்த தாக்குதலை எதிர்கொள்கிறது. பெரிகார்டியத்தின் இந்த வேலையின் போது தான் நெஞ்சுப் படபடப்பு ஏற்படுகிறது. ECG-யிலும் தற்காலிகமாக மாறுதல்கள் வேறுபட்ட வண்ணம் தோன்றுகின்றன.


பெரிகார்டியம் சீராக இயங்கும் போது மட்டுமே மனம் தெளிவாக இருக்கும்; உள்ளம் மகிழ்ச்சியாக இருக்கும் அமைதியான தூக்கம் கிடைக்கும் ஆங்கில மருத்துவம் பெரிகார்டியம் என்ற உறுப்பை வெறும் "உறை" யாகவே கருதுகிறது. அதை எந்த நேரத்திலும் கிழித்து எரிந்து விடலாம். அதனால் எதுவும் நேர்ந்து விடாது என்று எண்ணிக் கொண்டிருக்கிறது. ஆங்கில மருத்துவம் சற்று எண்ணிப் பார்க்கட்டும். ஏன் நம்மால் எந்த ஒரு இருதய நோயையும் குணமாக்க முடிவதில்லை? ஏன் சாதாரண இருதயப் படபடப்பையும் குணமாக்க முடியவில்லை அதற்குக் காரணமும் தெரியாமல் எவ்வாறு வைத்தியம் பார்க்கிறோம்? மனம் சஞ்சலப்படும் போது அல்லது உணர்ச்சி வசப்படும் போது மார்பு படபடக்கிறதே, மனதுக்கும் இருதயத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? மனம் என்ற ஒன்றை விஞ்ஞானக் கருவிகள் மூலமாக பார்த்துவிட முடியும். என்று நம்பினால் விஞ்ஞானக் கருவிகள் மூலமாக ஆராய்ச்சிகள் மேற்க் கொள்ளட்டும். மனம் என்ற ஒன்றைப் பார்க்க முடியாது என்றால் பொது அறிவைக் கொண்டு அறிய முற்படட்டும்.

நீரோடை போன்ற **தெளிவான மனதிற்கும், உள்ளத்தின் மகிழ்ச்சிக்கும் உறுதுணையாக இருப்பது இருதயத்தைப் பாதுகாக்கும் பெரிகார்டியம் எனும் உறுப்பாகும். சிலருக்கு சாதரண விஷயத்திற்கும் நெஞ்சுப் படபடக்கும். நெஞ்சுபட படப்பு ஏற்பட்ட உடன் தலைவலியும் ஆரம்பமாகி விடும்.** இந்த வகையில் ஏற்படும் தலைவலியுடன் மன அமைதியின் மையும் சேர்ந்து கஷ்டத்தைக் கொடுக்கும்.

இதனை குணப்படுத்த பெரிகார்டியத்தை ஸ்திரப்படுத்தக் கூடிய P 7 என்ற புள்ளிக்கு மிதமான மஸாஜ் கொடுத்தாலே போதுமானது.

மேலே சொன்ன உடல் உறுப்புகளான (Vital Organs) **நுரையீரல், வயிறு, மண்ணீரல், கல்லீரல், பெருங்குடல், சிறுகுடல், சிறுநீர்ப்பை, சிறுநீரகம், பித்த நீர்ப்பை, பெரிகார்டியம் இருதயம்** போன்றவற்றின் செயல்குறைவின் காரணமாகத்தான் தலைவலி ஏற்படுகிறது. இவ்வுறுப்புகளின் செயல் குறைவுக்குக் காரணம் என்ன என்பதைப் பார்போம்.

மேற்சொன்ன உடல் உறுப்புகள் ஒவ்வொன்றும் தன் இயக்கத்திற்குத் தேவையான மின் சக்தியை சுற்றுப்புறச்சூழலிருந்து தோலில் உள்ள ஒரு குறிப்பிட்ட பகுதியிலிருந்து பெறுகின்றன இது நேர்கோடுகளாக தலையிலிருந்து



படம்-4

கால்வரை பரவியுள்ளது. இவைதான் உள்ளுறுப்புகளுக்கு, அவற்றின் இயக்கத்திற்குத் தேவையான மின் சக்தியை சுற்றுப்புறச் சூழலிருந்து தோல் மூலமாக கிரகித்து குறிப்பிட்ட உறுப்புகளுக்கு அனுப்புகிறது. இவை சக்தி நாளங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் ஒரு உறுப்புக்குச் செல்லும் சக்தி நாளத்தின் பாதையில் தடை ஏற்படுமானால், அவ்வுறுப்பு தேவையான சக்தியை பெறாமல் சோர்வடைய ஆரம்பிக்கிறது. இந்தச் சோர்வின் காரணமாக ஏற்படும் தலைவலி, குறிப்பிட்ட சக்தி நாளத்தில் ஏற்பட்டுள்ள தடையை நீக்காத வரை குணமாகாது.இப்போது ஒவ்வொரு உறுப்பின் சக்தி நாளமும் தலையில் பரவி உள்ள இடத்தை மட்டும் பார்போம்.

கல்லீரலின் இயக்கம் யாவும் பித்த நீர்ப்பையின் இயக்கத்தை கட்டுப் படுத்துகிறது. பித்தநீர்ப்பை சக்தி நாளத்தின் பாதையில் ஏற்படும் வலி கல்லீரல், பித்தநீர்ப்பை இவை இரண்டின் பாதிப்பையும் உணர்த்துகிறது.


சிறுநீரகம், சிறுநீர்ப்பை இவை இரண்டும் இணை உறுப்புகளாகும். சிறுநீர்ப்பை சக்தி நாளத்தின் பாதையில் ஏற்படும் வலி சிறுநீரகத்தின் சோர்வை நமக்கு உணர்த்து கிறது.

**வயிறு, மண்ணீரல்**

வயிறு, மண்ணீரல் இவற்றில் எது பாதிப்படைந்தாலும் வயிறு சக்தி நாளத்தின் பாதையில் வலியைத் தோற்றுவிக்கிறது. (Trigeminal Neuralgia) எனும் முகத்திலும் தாடையிலும் மின்னல் போல பரவும் வலி வயிறு சக்தி நாளத்தின் பாதிப்பால் ஏற்படுகிறது. பெரும்பாலும் கடவாய்ப்பற்கள் , வயிறு சக்திநாளத்தின் பாதிப்பால் பழுதடைகின்றன. (வயிறு சக்தி நாளத்தின் பாதை கடவாய்ப்பற்களின் வழியாகச் செல்லுவதை பாருங்கள்)

படம் -4

பல் சொத்தைகள் அனைத்தும் வயிற்றின் இயக்க குறைவால் தான் ஏற்படுகின்றன. இந்த இயக்க குறைவு வயிறு சக்தி நாளத்தில் பிரதிபலிக்கிறது. தாடைப்பற்களின் வழியாகச் செல்லும் வயிறு சக்தி நாளம் தான் பற்களுக்கு தேவையான உறுதி அளிக்கிறது. மேலும் கண்களில் ஆரம்பித்துக் கீழே முகத்தின் வழியாக இறங்கும் வயிறு சக்தி நாளத்தில் குறைவான சக்தி ஒட்டம் பெறும்போது, கண்கள் பார்வைக் கோளாறுகள்,




படம்-5

முகங்களில் சைனஸ் வலி, அலர்ஜித்தும்மல், மூக்கடைப்பு, ஜலதோஷம், முகத்தில் கட்டுக் கடங்காத பருக்கள் ஏற்படுதல் போன்றவை உருவாகின்றன. இந்த வகையில் பார்வைக் கோளாறுடன் கண்களில் வலியும், ஏற்படும் போது கண்ணாடி அணிவிக்கிறார்கள். வயிறு சக்திநாளத்தில் எங்கு தடை ஏற்பட்டுள்ளதோ, அந்த தடையை தடையை நீங்கி, அதில் சக்தி ஓட்டத்தை சீர்படுத்துவோ மானால் கண் பார்வை கோளாறு களை அப் போதே சரிசெய்து விடமுடியும் சிறுபிள்ளைகளுக்கு கண்ணாடி அணிவிக்கும். அசம்பாவிதத்தை நீக்கிவிட முடியும். பிற்காலத்தில் ஏற்படக் கூடிய சொத்தைப்பற்கள், முகப் பற்கள், அலர்ஜி, சைனஸ் தொந்தரவுகள் போன்றவற்றை



இன்றே தவிர்த்துவிட முடியும்.

வயிற்றில் ஜீரண சக்தி குறைவாக இருக்கும் போது, வயிறு சக்தி நாளத்தில் சக்தி ஓட்டம் குறைவாக இருக்கிறது. இதனால் பற்கள் ஆட்டம் காணுவதும், பல் ஈறுகள் பலமிழந்து அவ்வப்போது இரத்தம் கசிதலும், பற்களில் ஒரு வித உளைச்சலும் ஏற்படும். வயிற்றில் ஜீரண சக்தியை மீண்டும் உயிர்ப்பிப்பது ஒன்றே இதற்குரிய சிகிச்சையாகும். இதன் சாத்தியத்தை அறியாத பல் மருத்துவர்கள் பற்கள் கெட்டுவிட்டது என்று தவறாக புரிந்துக்கொண்டு அதைப்பிடுங்கும் போது அந்த இடத்திலிருந்து வெகுவாக சக்தி வெளியேறிவிடுகிறது. வெளியேறும் இந்த சக்தியானது வயிறு சக்தி நாளத்திலிருந்து கிரகிக்கப்படுகிறது. இப்போது வயிறு சக்தி நாளத்தில் வெகுவாக சக்தி குறைந்த நிலையில், ஓட்டம் பெறாமல், பற்கள் பிடுங்கப்பட்ட அந்த பகுதிகளில் தேங்க ஆரம்பிக்கிறது. இந்த சக்தி தேக்கத்தின் காரணமாக சாப்பிடும் போதோ, குளிர்ந்த நீரைக் குடிக்கும் போதோ, அதிகமாக வாயைத் திறந்து சிரிக்கும்போதோ, பேசும் போதோ தாடையில் வலி பிறக்கிறது.

படம் -5

பற்கள் வலியின் காரணமாகப் பல்லைப் பிடுங்குதல் பிற்காலத்தில் முகத்தையே பிடுங்கக் கூடிய அளவுக்கு வலியை ஏற்படுத்தக் கூடிய (Trigeminal Neuralgia) என்ற வியாதிக்கு வழிவகுத்து விடும். என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

சிறுகுடல் சக்தி நாளம் பாதிப்புக்குள்ளாகும் போது படம் 2-ல் காட்டியுள்ளபடி கழுத்திலும், முகத்திலும் வலி பரவுகிறது.